பொது சன நூலகம்
20 JUN 2000
மாநகரசபை
யாழ்ப்பாணம்

மக்களின் ஆறு

வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

செவ்வாய்க்கிழமை (20 6 2000) VALAMPURI ஒலி: 183

★ அரசியல் அமைப்பு சீர்திருத்த சட்டமூலத்தின் முன்

கட்சிவிட்டு கட்சிதாவும் சட்டமூலம்

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

அமைச்சர் டி. எம். ஜெயரத்தின அறிவிப்பு

(கொழும்பு அலுவலக நிருபர்)

உத்தேச அரசியல் அமைப்புச் சீர்திருத்த சட்டமூலமாகிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், கட்சிவிட்டு கட்சிதாவும் சட்டத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளது.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளமையால் இச்சட்டத்திருத்தத்தின் மூலம் அவர்களை அரசுடன் இணைத்துக்கொள்வதற்கு வழிவகுக்குமென்று பொதுஜன ஐக்கிய முன்னணிசெயலரும், அமைச்சருமான டி. எம். ஜெயரத்தின தெரிவித்துள்ளார்

உத்தேச அரசியல் அமைப்பு சீர் திருத்தம் கட்சி விட்டு கட்சி தாவும், சட்ட மூலம், அரசு நடாத்த உத்தேசித்திருக்கும் பொதுத்தேர்தல் தொடர்பாக அமைச்சர் டி. எம். ஜெயரத்தின மேலும் தெரிவிக்கையில்;

உத்தேச அரசியல் அமைப்புச் சீர்திருத்த சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது எதிர்க்கட்சி எம்.பிக்கள் அரசுடன் இணைந்து வாக்களிக்கத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

பொதுத் தேர்தலை பிற்போடுமாறு அரசியல் கட்சிகள் கோரிக்கை

(கொழும்பு)

அரசு நடத்த உத்தேசித்திருக்கும் பதினோராவது பொதுத்தேர்தலைபின்போடுமாறு அரசியல்கட்சிகளும் பொது அமைப்புக்களும் அரசிடம் வலியுறுத்திவருவதாக பொதுஜன ஐக்கியமுன்னணிச் செயலாளரும், காணி விவசாய அமைச்சருமான டி. எம். ஜெயரத்தின தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

நாட்டில் இன்று காணப்படும் யுத்தசூழ்நிலையைக் கருத்தில்கொண்டு பொதுத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்சினைக்கான தீர்வில் முஸ்லிம்களை புறக்கணிக்கக்கூடாது!

தமிழ்க்கட்சிகளிடம் முஸ். காங். கோரிக்கை

(கொழும்பு)

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம் மக்களைப் புறக்கணித்து விட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியைத் தமிழ்க் கட்சிகள் கைவிடவேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான அஷ்ரப் தமிழ்க்கட்சிகளை அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஈழத்தமிழர் பிரச்சினைக்கு தமிழ்ழமே இறுதித் தீர்வாகும்

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கு தமிழ்ஈழம் ஒருவாக்கப்படுவதுதான் ஒரே வழி என்றும் அதுவே இறுதித் தீர்வாக இருக்குமென்றும் பாட்டாளி மக்கள்கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் நேற்று அரியலூரில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அரியலூரில் நேற்றுசெய்தியாளர் மத்தியில் பேசிய டாக்டர் ராமதாஸ், இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக பிரதமர் வாஜ்பாயுடன் மே மாதம் 3ம் திகதி புதுடில்லியில் சந்தித்து பேசவிருப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

தப்பி ஓடிய இராணுவம் கைது

இராணுவத்தை விட்டு தப்பி ஓடிய ஒருவரை ஆயுதங்கள் சகிதம் [மருதானை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவரிடமிருந்து ரீ-56 ரக சுழல் துப்பாக்கி ஒன்று, பிஸ்ரல் ஒன்று, 146 ரவைகள், 4 கைக்குண்டுகள், என்பன கைப்பற்றப்பட்ட தாகவும், இந்தநபர் மீதான விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ.4)

செஞ். கப்பல் இன்று புறப்படும்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நோயாளர் கப்பலான ''யாவாக்கால்'' இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என

[6ஆம் பக்கம்பார்க்க]

ஊரடங்கு மேலும் தளர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் மேலும் தளர்த்தப்பட்டுள்ளது. இதன்படி இன்று 20 ஆம் திகதி முதல் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருக்கும்.

இதேவேளை

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ்குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு தளர்த்தப்பட்டுமீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல்படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. (வ)

வயோதிப பெண்மீது பாலியல்வன்முறை 2 இராணுவத்தினர் நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி காந்தன் பகுதியில் வயோதிப பெண்மீது பாலியல் வன்முறை புரிந்தார்களென்ற சந்தேகத்தின்பேரில் இரண்டு இராணுவத்தினர் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவ்விருவரையும் அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு

(6ஆம் பக்கம் பார்க்க)

இனப்பிரச்சினை தீர்வு குறித்து தமிழ்க்கட்சிகள் கூடி ஆராயும்

(கொழும்பு)

அரசியல் அமைப்புச் சீர்திருத்தம், இடைக்கால நிர்வாகசபை, வடக்குக்கிழக்கு இணைப்பு, அது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு ஆகியவை குறித்து தமிழ்க் கட்சிகள் ஒன்று கூடி இன்று ஆராயவுள்ளன.

இது தொடர்பான கூட்டம் ஒன்றுக்கு ரெலோ அமைப்பு

(6 ஆம் பக்கம் பார்க்க)

அரசியல் லாபம்தேடும் அரசின் போக்கை மக்கள் முன் அம்பலப்படுத்துவோம்

(கொழும்பு)

''பொதுத்தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளை குறிக்கோளாகக் கொண்டே அரசாங்கம் அரசியல் யாப்பு தொடர்பான பேச்சுவார்த்தையை நடத்துகின்றதே ஒழிய தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அல்ல'' என்று ஐ.தே. கட்சி தெரிவித்துள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

குமாரை சுட்டுக்கொன்றவர் இனங்காணப்பட்டார்

(கொழும்பு)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பாக பிரதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே கொலைச் சம்

(6ஆம் பக்கம் பார்க்க)

''சிற்றி ஒவ் றிங்கோ'' நாளை புறப்படும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை யிலிருந்து திருமலைக்கு பயணிகளை ஏற்றிச் செல்லும் ''சிற்றி ஒவ் றிங்கோ'' கப்பல் நாளை புதன்கிழமை புறப்படுமென கிளிநொச்சி நிர்வாக அலுவலகம் நேற்று அறிவித்துள்ளது.

இக்கப்பலில் பயணம் செய்

[6 ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சின்னஞ்சிறு விளம்பரம்

Spoken English

சிறு குறூப்பாக ஆங்கிலத்தில் கதைக்கப்பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (புதிய மாணவர் பதிவுகள், வார நாட்கள் காலை 10இல் இருந்து 2 வரை. (1110)

சித்திரம்

தரம்-6-O/L, A/L (2001 2002) ஆகிய வற்றிக்கான வழமையான வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன I.A.T இல 76, ஆத்திசூடி வீதி கந்தர் மடம். (1115)

தவறிவிட்டது

நடராசா கேதீஸ்வரன் வரணி வடக்கு, வரணி. எனது அடையாள அட்டைகள் முள்ளிக்கும் கரவெட்டிக்கும் இடையே தவறிவிட்டன, கண்டெடுத்தவர்கள் சாயிராம் பார்மஸி நெல்லியடி, குமார் களஞ்சியம் வரணி இல் கொடுக்கவும். (1099)

தவறிவிட்டது

சங்குவேலி தெற்கு அம்மன் கோயிலடியைச் சேர்ந்த தங்கவேல் சுகந்தன் ஆகிய எனது வி. அ. அ. இல 090200 6000 கவிரெயிலர் மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோயிலடிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் மானிப்பாய் கவிரெயிலர் கடையில் ஒப்படைக்கவும். அல்லது சங்குவேலி தெற்கு, அம்மன் கோயிலடி. என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (1101)

தவறிவிட்டது

ஜீவானந்த மடோனஎன்பவரது தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் சுன்னாகம், சந்திக்கும் இணுவில் சந்திக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் S. தர்மகுலராசா. அம்பலவாணர் வீதி, உடுவில் சுன்னாகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். (1104)

தவறிவிட்டது

ஜெயபாலசிங்கம்-ஜெகதீஸ்வரன் ஆகிய எனது, 801681 603V என்னும் இலக்கம் முடைய தேசிய அடையாள அட்டையும் 0906206770 என்னும் இலக்முடைய விசேட அடையாள அட்டையும் 17-06-2000 அன்று உடுவிலுக்கும் தாவடிக்கும் இடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து, J/183 கிராம அலுவலகரிடம் அல்லது திகழ் கல்வி நிலையத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். (1103)

விற்பனைக்கு

பாவித்த வீட்டு ஓடுகள் 500 உம் மரங்களும் விற்பனைக்குண்டுகு. சோமசுந்தரம் புதுமதவடி சந்தை ஒழுங்கை, சுதுமலை, வடக்கு, மானிப்பாய். (1113)

திருத்துதல்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல் கெமரா எலக்ரோனிக் பிளாஸ் கன். புகைப்படத் துறை சார்ந்த கருவிகளும் திருத்திக் கொடுக்கப்படும் ரகுபோட்டோ டெக்னிக் 301- கஸ்தூரியார் வீதி ஹேல்மாடி (கன்னாதிட்டிசந்திக்கருகில்) (1118)

சுந்தர் வெளியீடு
புலமைப் பரிசில் வினாத்தாள்

27 ஆவது பயிற்சி வினாத்தாள் வரும் ஞாயிறு (25/06) வெளிவரும். மேலதிக விபரங்களுக்கு 3085 தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். வினாத்தாள்களை பிரபல்ய புத்தகசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், பாடசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். [1117]

யாழ். நகர் நவீனசந்தைக் கட்டடத்தில் (உட்புற) இல. 63 A, 62A, 61 என்னும் முகவரியில் இயங்கி வந்த

விநாயகர் புடவைஅகம்

என்னும் எமது ஸ்தாபனம் தற்போது

★ சுன்னாகம் சந்தியில் மஹாராஜா பில்டிங்கிலும்

★ மானிப்பாயில், மானிப்பாய் இலங்கை வங்கி முன்பாகவும்

★ தொடர்ந்து யாழ். நகரில், இல-63A நவீனசந்தை உட்புறத்திலும் இயங்கி வருகிற தென்பதை

வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகிறோம். (கி-527)

கண்ணீர் அஞ்சலி

அமரர்

விசுவநாதர் சுப்பிரமணியம்

எமது பாடசாலை சகஆசிரியை

செல்வி.சு. ராகினி

அவர்களின் அன்புத்தந்தையார் அமரர் வி.சுப்பிரமணியம் அவர்கள் 2000-6-19 அன்றுசிவபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யாழ். கந்தர்மடம சைவப்பிரகாசவித்தியாலயம்
(1116)

எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்	மறைவு
14	18
12	06
1957	1992

செல்வி

சௌபாக்கியவதி நவரத்தினராஜா

(ஆசிரியை யா/வட இந்து மகளிர் கல்லூரி)

(திதி 20-06-2000)

ஆண்டெட்டு பறந்தாலும்
நம் எண்ணங்கள் உன்னை
ஒருபோதும் மறப்பதில்லை
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

அவரது பிரிவால் துயருறும்

அன்பு அம்மா, அண்ணன்மார்.
அண்ணிமார், மருமக்கள்.

கணேசன் தோட்டம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. (கி-526)

கூலிக்குக் கொலை புரியும் பாதாள உலகக் கோஷ்டியின் கொட்டம்

கொழும்பில் அதிகரிக்கிறது

(கொழும்பு)

பாதாள உலகக்கேஷ்டியினர் அண்மைக்காலத்தில் மாத்திரம் கொழும்பு மாவட்டத்தில் 28 கூலிக்கொலைகளைச்செய்துள்ளதாகப் பொலிஸ் பதிவேடுகள் மூலம் தெரியவருகிறது.

இவர்கள் பாலியல்வல்லுறவுகளிலும் ஈடுபட்டுவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது தலைமறைவாகியிருக்கும் இக்குற்றவாளிகள் பொலிஸாரிடமிருந்து தப்புவதற்காக படகுகள் மூலம் வெளிநாடுகளுக்குச் செல்ல முற்பட்டு வருவதாகவும் தகவல்வெளியாகியுள்ளது. (ஸ்ரீ)

இரு நிகழ்வுகள்

(அரியாலை)

சுதுமலை வடக்கு நாமகள் சனசமூகநிலைய வருடாந்த பொதுக்கூட்டமும், புதியநிர்வாக சபைத்தெரிவும், எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மேற்படி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும். [ஸ்ரீ-106]

C. C. A. A/L தமிழ்

By நாக தமிழிந்திரன்

★ 2000 மீட்டல் - வியாழன், சனி 2.15 (16 மணித்தியாலம்)

★ 2001 புதிய பிரிவினர் அந்நேரம் சந்திக்கவும்.

NOTE - SUBRA - 14 இல்

2002 3ஆவது பிரிவு (01-07-2000 முன்) (1114)

மரண அறிவித்தல்கள்

விசுவநாதர் சுப்பிரமணியம்

புங்குடுதீவு ஆறாம் வட்டாரம் இறுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட யாழ்ப்பாணம் பறங்கித்தெரு தேனீர்க்கடை உரிமையாளர் விசுவநாதர் சுப்பிரமணியம் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்ற விசுவநாதர் பார்வதியின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ் சென்ற ஆறுமுகம் வள்ளியம்மையின் மருமகனும் இராசமமாவின அன்புக் கணவரும் காலஞ் சென்ற இராஜகோபால சரோஜினி (கொழும்பு), கௌரி (ஜேர்மன்), சிறிதரன், மகேந்திரன் (ஜேர்மன்), ரஞ்சனி (கனடா), ராகினி (ஆசிரியை யாழ், கந்தர்மடம சைவப்பிரகாச வித்தியாசாலை), நந்தினி (சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தனபாலசிங்கம (வர்த்தகர் கொழும்பு), இராசகுலசிங்கம [ஜேர்மன்], கௌரி (ஜேர்மன்), ஜானகி (ஜேர்மன்), சிவபாலன் (கனடா), தர்மசீலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மார்க்கண்டு, கனகரத்தினம் [இந்தியா], இராசதுரை, கந்தசாமி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ் சென்ற சுப்பிரமணியம், நாகம்மா, முத்தம்மா, செல்லத்துரை (இங்கிலாந்து), காலஞ் சென்ற சின்னையா, பொன்னம்பலம் (J. P. புங்குடுதீவு), சின்னம்மா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் புங்குடுதீவு, இல்லத்தில் 20-06-2000 இன்றுகாலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கேரதீவு மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மனைவி. இராசம்மா
மகள் இராகினி (ஆசிரியை)
க. பொன்னம்பலம். J. P.
(1112)

திருமதி
சுப்பிரமணியம் மனோன்மணி

சிவன் கோவிலடி சந்திரபுரம் மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மனோன்மணி 14.6.2000 அன்று அகாலமரணமானார்.

அன்னார் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும காலஞ்சென்ற கதிரவேலு முத்துப்பிள்ளை தம்பதிகளின அன்புமகளும். சிவகடாட்சம் (சுவிஸ்) சிவகுமார், (இலண்டன்) சிவகௌரி, ஆகியோரின் பாசமிகுதாயாரும காலஞ்சென்ற நடேசபிள்ளை, திருமதி குமாரவேலு, தேவி, பாலசிங்கம், காலஞ்சென்ற பூபாலசிங்கம், பாலசுந்தரம் (சுவிஸ்), பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரூபி, (இலண்டன்) சிவபாலன் ஆகியோரின் அன்புமாமியும் ஆவார் இறுதிக்கிரியைகள் 21.6.2000 மல்லாவி இந்துமயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சி. சுப்பிரமணியம் (கனகசபை)
முன்னாள் இ.போ.ச.சாரதி
வவுனியா

தற்போதையமுகவரி,
க.குமாரவேலு,
சிறுப்பிட்டி கிழக்கு
நீர்வேலி. [1111]

பாடசாலைக்கல்வியை தொடராது வீதிகளில அலையும் மாணவர்கள்

வடபகுதி அதிபர்கள் சங்கம் விசனம்

தற்போதைய பதற்ற நிலையை அடுத்து தென்மராட்சி மற்றும் யாழ்ப்பாண பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மாணவர்கள் பாடசாலைக் கல்வியை கொடர முடியாத நிலையில் வீதிகளில் அலைந்து திரிகின்றனர்.

வடமாகாண அதிபர்கள் சங்கம் அண்மையில் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இம் மாணவர்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு உடனடியாக அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியைப்பெற்று உதவுமாறும் அதிகளவில் இடம் பெயர்ந்த மாணவர்களைப் பொறுப்பேற்றுள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் தளபாடம் மற்றும் நீர்வசதி முதலான அடிப்படை வசதிகளைப்பெற்றுக்கொடுக்க நடவடிக்கைஎடுக்கும்படியும் சகல கல்விப் பணிப்பாளர்களையும் வடமாகாண அதிபர்கள் சங்கம் கேட்டுள்ளது.

மாவட்டமட்டத்திலான விளையாட்டுப்போட்டி, மொழித்திறன் போட்டிகளையும் நடாத்தி அவற்றில் எமது மாணவர்களுக்கு கிடைக்கக் கூடிய அனுகூலங்களுக்கு உதவுமாறும் மேற்படி அதிபர்சங்கம் தெரிவித்துள்ளது. (க-வ)

ம.எண்ணெய் பெறமுடியா நிலை பட்டை மூலம் நீரிறைப்பு

வலிகாமம் பகுதி விவசாயிகள் தண்ணீர் இறைப்பதற்கு மண்ணெண்ணெய் இன்றி பெரும் அவதி நிலையை எதிர்கோக்குகின்றமையால் சிலர் பட்டை மூலம் நீர் பாய்ச்சும் நடவடிக்கையை மேற்கொள்வதையும் காணமுடிகிறது.

இதனால் மருதனார்மடம், சுன்னாகச் சந்தைகளில் மரக்கறிகளின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

ஒருகிலோ முருங்கைக்காய், உருழைக்கிழங்கு என்பன நூறு ரூபாவை தாண்டியுள்ளன

இடம் பெயர்ந்தோர் வருகையாலும் சந்தைகள் காலை வேளைகளில் களை கட்டுகின்றன. (ஸ்ரீ-106)

ஜனாதிபதிக்கு பூரண ஆதரவை அனைவரும் வழங்க வேண்டும்

விஜபால மெண்டிஸ் எம். பி

(கொழும்பு)

"1991 இல் தெற்கில் கிளர்ச்சி ஏற்பட்டபோது அதனை அடக்கி ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு அன்று எதிர்க்கட்சித் தலைவர் எவ்வாறு ஒத்துழைப்பு வழங்கினாரோ அதே போன்று ஐ. தே. க. வம் ஏனைய கட்சிகளும் வடக்கின் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரத் தமது பூரண ஆதரவை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவுக்கு வழங்க வேண்டும்"

இவ்வாறு கம்பஹா மாவட்ட எம். பி. விஜயபால மெண்டிஸ் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

"ஒரு முக்கியமான கால கட்டத்தில் நாம் இன்று இருக்கின்றோம். இங்கு நாம் ஒருவர் மீது ஒருவர் குறை கூறிக்கொண்டும் சொற்போர் நடத்திக்கொண்டிருப்பதும் அர்த்தமற்றது" என்றும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ)

ஊரடங்கு வேளையில் கடை உடைத்து பொருட்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள பான்சி ஹவுஸ் கடை ஒன்று ஊரடங்குச்சட்ட வேளையில் (இரவு 9.00 மணியளவில்) உடைக்கப்பட்டு 30ஆயிரத்து 850 ரூபா பெறுமதியான பொருடகள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக அருமைநாயகம் ஞானானந்தன் (வயது 23) யாழ்ப்பாணம், நல்லையா விஜயகுமார் (வயது 22) யாழ்ப்பாணம் ஆகியோர் யாழ். பொலிஸாரினால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேகநபர்கள் இருவரையும் இம்மாதம் 24ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். பதில் நீதிபதி கே. கேசவன் உத்தரவிட்டார். (வ-க)

கந்தளாய்ப் பகுதியில் விசேட பாதுகாப்பு ஏற்பாடு

(கொழும்பு)

கந்தளாய் பிரதேசத்திற்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இப்பகுதியில் அடிக்கடி இடம்பெறும் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் காரணமாகவே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதம் தரித்த இராணுவம், பொலிஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், சந்தேகத்திற்கு இடமானோர் படையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

50 அப்பிள்களை இலஞ்சமாக கேட்ட பொலிஸ் அதிகாரி; எம். பி. பிரஸ்தாபம்

(யாழ்ப்பாணம்)

தடுத்து வைக்கப்பட்ட ஈழமக்கள் ஜனநாயக கட்சியைச் சேர்ந்த ஒருவரை விடுவிப்பதற்கு பொலிஸ் அதிகாரி ஒருவர் 50 அப்பிள்களையும் 50தோடம்பழங்களையும் இலஞ்சமாக கேட்டதாக ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எஸ் தவராஜா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் இடம் பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தமிழ் மொழிக்கு சம உரிமை என்று கூறப்படுகிறது. எம். பிக்களாகிய எங்களுக்குக் கூட தமிழில் கடிதங்கள் இல்லை. சாதாரண தமிழ் மக்களை இவை எவ்வாறு சென்றடையும்; மிகக் குறுகிய காலத்தில் அரசியல் தீர்வொன்றை கொண்டு வந்து நடைமுறைப்படுத்துங்கள். அவசரகால ஒழுங்கு விதிப் பிரகடனம் யாருக்கு அதிகாரத்தைக் கொடுக்கிறது என்பதை இங்கு அவதானிக்க வேண்டும்.

அமைச்சர் நிமல்டீ சிறிபால சில்வா உரையாற்றுகையில்; ஐ. தே. க. வினர் அரசுமீது சேறு பூசுவதையே வழமையாகக் கொண்டுள்ளனர்; நாட்டைப்பற்றி சிந்திப்பது கிடையாது. முதலில் தேசத்தைப்பற்றி சிந்திக்கவேண்டும்.

அவசரகாலவிதிகள் எமது நாட்டிற்குப் புதியதல்ல ஐக்கியதேசிய ஆட்சிக்காலங்களிலும் பொதுசன ஐக்கியமுன்னணி ஆட்சியிலும் இவ்விதிகள் அவ்வப்போது நடைமுறைப்படுத்தப்பட்டன என்றார். [க]

மக்களுக்கு பயன்தராத பட்ஜெட்

(கராச்சி)

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி சமர்ப்பித்துள்ளவரவு செலவுத்திட்டம் மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றதாக அமையவில்லையென்று எதிர்க்கட்சிகள் குறை கூறியுள்ளன.

திட்டத்தில் குறிப்பிட்ட வருவாயை எட்டமுடியாதென்றும் இராணுவ ஆட்சியில் நிதி நிருவாகக்குறைபாடுகள் மலிந்திருக்கின்றனவென்றும் பாகிஸ்தான் மக்கள் கட்சி கூறியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

நெல்லியடியில் தலைமையகம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் அதன் தலைமையகத்தினை நெல்லியடியில் அண்மையில் திறந்து வைத்துள்ளது.

இச்சங்கத்தின் எல்லைப் பரப்பிற்குள்வாழ்ந்த குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளைச் சங்கம் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-77)

குடி நீர் வழங்கல் தடைப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி, கரவெட்டி, கரவெட்டி தெற்குப்பகுதிகளுக்கு வழங்கிவந்த குடிநீர் வழங்கல் டீசல் இல்லாததால் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இக்குடிநீர் வழங்கல் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் கரவெட்டி நீர்த்திட்டத்தின்கீழ் இடம்பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-41)

வயோதிபமாது மரணம்

(வவுனியா)

கைதடி வயோதிபர் இல்லத்தில் ஷெல்லினால் காயமடைந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பாக்கியம் (வயது 71) என்பவர் உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-7)

யாழ். தபாலகத்தில் பணிகள் வழமைபோல இடம்பெறுகின்றன

(அரியாலை)

யாழ்ப்பாணம் பிரதான தபாலகத்தில் வழமையான பணிகள் சீராக நடைபெறுவதாக பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

இடம் பெயர்ந்த மக்கள் பலரும் கடிதங்களைப் பெறுவதற்காக தினமும் தபாலகத்தில் முண்டியடித்தபடி உள்ளனர்.

ஆனால் ஏனைய இடங்களுக்கான விநியோகப பணிகள் இடம் பெறுகின்றன. உப தபாலகங்களில் கடந்த சில வாரங்களாக முத்திரைகளுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-106)

"தமிழர் ஏற்கக்கூடிய அதிகார பகிர்வு வழங்கினாலே சிறப்பு"

(கொழும்பு)

'வடக்கு-கிழக்கு மாகாண மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அதிகாரப் பகிர்வு அமையவேண்டும். அல்லது யுத்தம் தொடர்ந்து தமிழ்-சிங்கள இளைஞர்கள் சண்டையிட்டுக் கொண்டு இரு இனங்களும் அழிவை நோக்கியே செல்லும்'

இவ்வாறு ஈ. பி. டி. பி. எம். பி. மார்க்கண்டு குணசேகரம் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் கூறினார்.

"மாகாண சபை முறை வடக்கு-கிழக்குப் பகுதிகளாகவே அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. ஆனால் அங்கு மாகாண சபை இயங்கவில்லை. ஏனைய இடங்களில் செயற்பட்டு வருகிறது" என்றும் அவர் சொன்னார். (ஸ்ரீ)

இனவாதத்துக்குத் தூபமிட்டோர் ஐ. தே. க. வினர் என்பதே உண்மை

அமைச்சர் ஜெயரத்ன உரை

(கொழும்பு)

"இந்த நாட்டில் 1983-ம் ஆண்டு ஜூலைக் கலவரத்தை உண்டுபண்ணித் தமிழ் மக்களின் உயிர்களையும் உடமைகளையும் பறித்தவர்கள் ஐ. தே. க. உறுப்பினர்களும், பிரதி அமைச்சர்களும் தான். இனவாதத்துக்கு ஐ. தே. க. வினரே தூபம் போட்டனர். அதன் பிரதிபலிப்புத் தான் இன்றைய யுத்தம்"

இவ்வாறு காணி, விவசாய அமைச்சர் டி. எம். ஜெயரத்ன பாராளுமன்றத்தில் பேசுகையில் சொன்னார்.

"இந் நாட்டில் தமிழ் மொழிக்கு இரண்டாவது இடத்தை வழங்க வேண்டும் என்று பண்டாரநாயக்கா ஆட்சியில் சட்டம் கொண்டு வரப்பட்ட போது அதனை எதிர்த்தவர் ஜே. ஆர். ஜெயவர்தனா என்பதை ஐ. தே. க. வினர் மறந்து விட்டனரா?" என்றும் அவர் சொன்னார். (ஸ்ரீ)

சந்திப்புக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடியில் இயங்கி வந்து தற்போது ஏழாலை மேற்கு ஸ்ரீ சத்யசாயி பஜனை நிலையத்தில் இயங்கிவரும் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் உள்ள பிள்ளைகளை அவர்களது சுக நிலையில் நாட்டம் கொண்டோர் நேரில் வந்து சந்திக்கலாம். என்று இந்து சமயப் பேரவைச் செயலாளர் திரு சி சக்திகிரீவன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

யாழ். வண் கிழக்கு கலட்டி

எச்சாட்டி மகாமாரி அம்பாள்

தேவஸ்தானம் மகாசபைக் கூட்டம்

மேற்படி மகா சபைக் கூட்டம் 2-7-2000ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப 3 30 மணியளவில் தேவஸ்தான முன் மண்டபத்தில் தலைவர் கலாநிதி க குணராசா அவர்களின் தலைமையில் நடைபெறும். மகா சபை அங்கத்தவர்கள் அனைவரையும் திருவிழா உபயகாரர்களையும் தவறாது சமுகம் தரும் வண்ணம் வேண்டுகின்றோம்.

புதிய நிர்வாகசபை அங்கத்தவர் தெரிவும் நடைபெறும்.

முக்கிய குறிப்பு:- நாட்டு நிலைமை காரணமாக தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்பமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

க. குணராசா
தலைவர்

பொ. மகேசலிங்கம்.
செயலாளர்

19-06-2000 (1107)

விசேட கவனத்திற்கு

(திருட்டு)

16-05-2000-ல் திருட்டுப்போன பிளக்வகைகள், 100Kg தராசு, மிதி வண்டி ரியூப்கள் யாராவது விற்பனை செய்ய உங்களிடம் வந்திருக்கக் கூடும். இது நாளை உங்களுக்கும் நடக்கலாம். எனவே இதைப் பெரும் தொண்டாகக் கருதி உடன் தபால் மூலம் தகவல் தரவும்.

தகவல்கள் அந்தரங்கமாகப் பேணப்படும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

க. கணேசராசா
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(கி/520)

உலகம் பூராவும் யுத்தத்தில் 3 லட்சத்துக்கும் அதிகமான சிறுவர்கள்

(பாங்கொக்)

உலகெங்கிலும் மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் யுத்த நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களைப் படைவீரர்களாகப் பயன்படுத்துவதை தடுப்பதற்கான கூட்டமைப்பே இத்தகவலை வெளியிட்டுள்ளதாக 'ராய்ட்டர்' தெரிவித்தது.

சிறுவர்களைத் தேசிய இராணுவங்களும் கெரில்லா அமைப்புக்களும் பரவலாகப் பயன்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ள அவ்வமைப்பு குறிப்பாக ஆசியாவிலும் ஆபிரிக்காவிலுமே 18 வயதுக்குட்பட்டவர்கள் அதிகளவில் யுத்த நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளது. (ஸ்ரீ)

யஸிர் அரபாத் - அத்வானி விரிவான முறையில் பேச்சு

(புதுடில்லி)

இந்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி பாலஸ்தீன அதிபர் யாஸிர் அரபாத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

காஸாவில் இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தையின் போது இந்திய - இஸ்ரேலிய இருதரப்பு நல்லுறவுகள் மற்றும் ஆசிய பிராந்திய அமைதி நிலை குறித்தும் பேச்சு நடாத்தப்பட்டது.

இதற்கிடையில் இந்திய உள்துறை அமைச்சர் இஸ்ரேலிய பிரதமர் எகுட்பராக்குடனும் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். இஸ்ரேலிய துணைப் பாதுகாப்பு அமைச்சர் இப்றாகிம் இஞ்சுடனும் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

உலகை அச்சுறுத்தி வரும் பயங்கரவாதம் குறித்தும் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

பயங்கரவாதத்தை எதிர்த்து சர்வதேச ரீதியில் போர்க்கொடி

(கெய்ரோ)

பயங்கரவாதத் தொல்லையை ஒன்றுசேர்ந்து எதிர்த்துப் போராடுமாறு மத்திய வர்த்தக மற்றும் தொழிற்துறை அமைச்சர் முரசொலி மாறன் ஜி 15 வளரும் நாடுகள் குழுவைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

கெய்ரோவில் ஜி 15 நாடுகளின் வெளியுறவு மந்திரிகளின் கூட்டத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் சார்பாகக் கலந்துகொண்ட திரு. முரசொலி மாறன் பயங்கரவாதம் வளரும் நாடுகளுக்கு மட்டுமன்றி சர்வதேச அமைதி மற்றும் பந்தோபஸ்த்துக்கும் அச்சுறுத்தலாகுமென்றும் கூறினார்.

ஜி 15 மற்றும் ஜி 8 நாடுகளுக்கிடையே நிரந்தர பேச்சுவார்த்தை இருப்பதன் அவசியத்தை மாறன்வலியுறுத்தினார்.

எகிப்திய அதிபர் திரு. கோசி முபாறக் இன்று உச்சிமாநாட்டைத் தொடக்கிவைப்பார்.

இந்திய குடியரசுத்துணைத் தலைவர் கிருஷ்ணகாந் தலைமையில் இந்தியக்குழு அதில் கலந்துகொள்ள இருக்கிறது. என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

சொலமன் தீவுப் பாராளுமன்றம் இம்மாதம் 28-ல் கூடலாம்!

(இலண்டன்)

சொலமன் தீவுகள் அமைதியை மீட்கும் பொருட்டு நாடாளுமன்றம் கூடி புதிய பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்காகப் புதியதிகதி குறிக்க வேண்டும் என்றும் அந்நாட்டு கவனர் ஜெனரல் கூறியிருக்கிறார்.

இம் மாதம் 28-ம் திகதி நாடாளுமன்றம் கூடவேண்டுமென்றும் கவர்னர் ஜெனரல் சேர் ஜோன் ஜிளிலாடலிஒலி பரப்பு ஒன்றில் கூறியுள்ளார்.

போரிடும் இரண்டு குழுக்களுள் ஒன்றான கழுகுப்படை இன்னமும் தெருக்களில் உலாவி வருவதால் அமைதிக்குப் பங்கம் ஏற்படுமோ எனச்சந்தேகிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. (து)

4ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்	மறைவு
15	04
03	07
1961	1996

அமரர்

சண்முகராஜா உதயகுமார்

திதி

20-06-2000

அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். பிரிவால் வாடும்

தந்தை, தாய், சகோதரர்கள்.

இல. 75, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (1062)

செய்திப்பரல்

★ பிஜி நாட்டில் இந்திய வம்சாவழியின ரபழங்குடி மக்கள் என்ன வேண்டுமாயினும் செய்யட்டும் என்று அந்நாட்டு அதிகாரிகள் விட்டுவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

★ இஸ்ரேல் பிரதமருடன் இந்திய உள்துறை அமைச்சர் அத்தவானி உரையாடினார்.

★ பூம்புகார் நகரில் சங்ககாலச் செப்பு முத்திரை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் புலி உருவம் பொறிக்கப்பட்டிருப்பதால் சோழர்கால முத்திரை என்று சொல்லப்படுகிறது.

★ ஆயுதங்களை ஏற்றிச் செல்லக் கூடிய பிறீ ஏவுகணையுடன் கூடிய நீர்மூழ்கிக் கப்பலை இஸ்ரேல் சென்றமாதம் சோதித்துப் பார்த்ததாகச் செய்தியொன்று கூறுகிறது. (து)

ஆராய்வு

(தென்மராட்சி)

யுத்த நிலைமைகள் காரணமாக யாழ். மாவட்ட மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள், கஷ்டங்கள் பற்றியும் இடம்பெயர்ந்த குடும்பங்களின் நிலைப்பாடுகள் பற்றியும் யாழ். மாவட்ட அரசசார் பற்ற நிறுவனங்களின் இணையம் திங்கள் தோறும் அதன் அங்கத்துவப் பிரதிநிதிகளுடன் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் யாழ். மாவட்ட நிலைமைகள் பற்றி கொழும்பிலுள்ள மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்துக்கும் நிலைவர அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (ஸ்ரீ-77)

கொடூரம்

(கொழும்பு)

புத்தளத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்விகற்கும் 13 வயதுச் சிறுமி ஒருத்தியைக் கடத்திச் சென்று பாலியல் வல்லுறவு புரிந்து கடும் சித்திரவதைக்கு உட்படுத்திய இளைஞனையும் அதே வேளை இச் சிறுமியின் பெற்றோரிடம் கப்பம் கோரிய மற்றுமோர் இளைஞனையும் பொலிசார் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஸ்ரீ)

பெண் பலி

[யாழ்ப்பாணம்]

தெகிவளைப் பகுதியில் பேரூந்து ஒன்று பெண் ஒருவருடன் மோதியதில் அப்பெண் கொல்லப்பட்டார்.

இதையடுத்து அப்பகுதி மக்களால் பேரூந்து தீயிடப்பட்டது. (12-ஸ்ரீ)

விவசாயிகள் துயரம்

(வட்டுக்கோட்டை)

வட்டு. சங்கரத்தை விவசாய சம்மேளத்திற்கு உட்பட்ட விவசாயிகள் தமது பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதியளவு மண்ணெண்ணெய் இல்லாது பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள்.

இந்த விவசாயிகள் தமது தோட்டச்செய்கைக்கு வேண்டிய மண்ணெண்ணெய்யை வழங்கி உதவுமாறு சம்பந்தப்பட்டோருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-4)

பீஹாரில் தொடர்ந்து பதற்றநிலை கூடுதல் படையினர் அனுப்பிவைப்பு

(லக்னோ)

பீஹாரில் அண்மையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தை அடுத்துமத்திய பீஹார் முழுவதுமே பதற்றநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துருப்புக்கள் கூடுதலாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இச்சம்பவம் பீஹார் அரசை கவிழ்ப்பதற்கான முயற்சியின் ஒரு பகுதி என அம்மாநில முதல்வர் ராப்ரிதேவி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் பீஹாரில் ராப்ரிதேவி தலைமையிலான அரசாங்கம் உடன்பதவி விலக வேண்டும் என்று கோரிக்கை வலுப்பெற்றுவருகிறது.

பீஹாரில் குடியரசுத்தலைவர் ஆட்சியைகொண்டுவரும் உத்தேசம் புதுடில்லி அரசிற்குகிடையாதென்றும் மாநிலத்தில் அமைதிநிலையை ஏற்படுத்த உடன்நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதமர் அடல்பிஹாரிவாஜ்பாய் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

டில்லியில் இரண்டு குண்டுகள் வெடித்தன இருவர் பலி, பலபஸ்கள் சேதம்

(புதுடில்லி)

டில்லியில் செங்கோட்டைக் கருகே நேற்று முன்தினம் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவங்களில் இரண்டுபேர் கொல்லப்பட்டனர். 10 பேர் காயமடைந்தனர்.

முதலாவது குண்டுவெடிப்புச்சம்பவம் செங்கோட்டைக்கு எதிராகவுள்ள டில்லி போக்குவரத்துக்கழக அறை ஒன்றில் இரவு 8. 00 மணியளவில் வெடித்ததாக காவல் துறைவட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவஇடத்தை சுற்றி நிறுத்தப்பட்டிருந்த பஸ்கள் சேதமடைந்தன. பின் 7 நிமிடங்கள் கழித்து சுமார் 100 அடி தூரத்தில் இரண்டாவது குண்டுவெடிப்பு நிகழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து விசாரணை நடத்த பொலிஸ்உயர் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்திருக்கின்றனரென்றும் பாதுகாப்புகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)

விநியோகம்

(அரியாலை)

கோண்டாவில் பகுதியில் தனியார் மண்ணெண்ணெய் முகவர்கள் பங்கீட்டு அட்டைக்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் அடிப்படை விலையில் விநியோகித்து வருகின்றனர். அதே நேரம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மண்ணெண்ணெய் விநியோகம் நடைபெறுகிறது. கறுப்புச் சந்தையில் ஒரு லீற்றரின் விலை ஐம்பது ரூபாவைத் தாண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-106)

கண்ணீர் அஞ்சலி

ஆழ்வாப்பிள்ளை சிற்சபேசன்

(முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர் யாழ். பல்கலைக்கழகக் கிளை)

17 - 06 - 2000 அன்று இறைபதம் அடைந்த எமது

சனசமூக நிலையத் தலைவர்

ஆழ்வாப்பிள்ளை சிற்சபேசன் அவர்களின் மறைவை இட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உடுவில் மத்திய சனசமூக நிலையம்.

(1105)

ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்	மறைவு
1916	1995
10	06
10	15

அமரர் நாகமணி முத்துச்சாமி

(திருமேனி)

(முன்னாள் கனகேஸ்வரி லொறிரான்ஸ்போட் உரிமையாளர். 16/12 விதானையார்வீதி, சுண்டுக்குளி.)

அன்பான ஐயாவே,

ஆண்டு ஐந்து மறைந்ததையா - நீங்கள் ஆண்ட இடமும் அகன்றதையா,

நீண்டு நாங்கள் வாழ்வோமோ என்று நிலை கலங்கி நிற்கின்றோமையா,

மீண்டும் இது போல் பிறப்பிருக்கும் என்றால் நீங்கள் மீண்டு வந்து எம்முடன் சேருமையா.

தற்காலிக முகவரி
கோண்டாவில் வீதி,
இருபாலை.

உங்களை நினைவு கூரும்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(1072)

தலைமை நூலகம் மாதகாரட்சி மன்றம் யாழ்ப்பாணம்

சீரினும் சீரல்ல செய்வரே சீரொடு
பேராண்மை வேண்டுபவர்
குறள்

வலம்புரி

இன்னுமா இனவாதம்

நாட்டின்பேரழிவுக்குக் காரணமே இன வாதம் தான். புரிந்துணர்வு இல்லாமையும் உண்மையைப் புரிந்து கொள்ள மறுப்பதுமே நாட்டின் கடந்த காலப் பின்னோக்கலுக்கு காரணங்களாக அமைந்து விட்டன. புதிய உதயங்கள் புதுமை சேர்ப்பனவாக அமைய வேண்டும். கடந்த அரை நூற்றாண்டு காலமாக அரசியல் நடந்து வந்த பாதையை- இழைக்கப்பட்ட அநீதிகளை- உரிமை மறுப்புக்களை பட்ட வர்த்தனமாக ஒப்புக் கொண்ட, உணர்ந்து கொண்ட ஆட்சித் தலைவர் இன்றைய ஜனாதிபதி தான். பலகாரம ஆச்சுதோ இல்லையோ அந்த உள்ளத்தெளிவுக்கு நன்றி.

சிங்கள உறுமய என்றோ ஒரு நாள் இந்த நாடடை ஆளும். அந்நிலை வந்தால் சிங்கள மக்கள் இழந்த உரிமைகளை மீட்டுக் கொடுப்போம் என அமைப்பாளர் திலக் கருணாரெட்னா பிரச்சாரம் செய்கிறார். உரிமைகளை இழந்தவர்கள், தமிழர்கள். ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டவர்கள் தமிழர்கள் வீடு எரிகிறபோது நெய் ஊற்றுவது போல அரசியல் விவேகமற்ற கூற்றுக்கள் அழிவையே தரும். அதுவும் இந்த வேளையில் அரசியல் காளான்கள் துயிலில் பிதற்றுவது போல் பொருளில்லாது பேசக்கூடாது.

வாழ், வாழவிடு என்ற மனப்பக்குவம் பல்லின மக்கள் வாழும் மேற்குலக நாடுகள் போல் வந்தாக வேண்டும். உலகம் சுருங்கி விட்டது. அதீத வளர்ச்சி காண்கிறது. நாங்கள் கற்காலத்துக்கு பின்னோக்கிச் செல்வதா? ஆக்கத்தை அழிவுக்குப் பயன் படுத்துவதா? சிந்தனையற்ற அரசியல் சித்தாந்திகள் கிளைவிடலாகா.

சிந்தித்தால் சினம் பொங்குகிறது கண்கள் நீரால் நனைகின்றன. சுதந்திரதாகம் பொய்யாய்- கனவாய்- கானல் நீராய் விடுமோ என்ற ஏக்கம் இதயத்தின் இயக்கத்தை நிறுத்தி விடுமோ என்று எண்ணத்தோன்றுகிறது.

வேண்டாத வினைகள் தீண்டா திருப்போமாக. அந்நியோன்யம் பல்லின நாட்டில் மலர்ந்திட விழிப்புடன் செயல் படுவோம். வேதனைகள், சோதனைகள் மறைந்திட முழுமனத்துடன் நாட்டின் நலன் கருதி உழைப்பார்களாக,

- அன்புடன் ஆசிரியர்

இடம் பெயர்ந்தோரின் அவசிய தேவை பற்றிய உண்மை நிலை வெளிப்படுத்தப்பட வேண்டும்

திரிபுபடுத்தல் இழிவு என்கிறது அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய நெருக்கடி காலச் சூழ்நிலையில் பல்வேறு துன்பம் துயரங்களுக்குள்ளாகி தவிக்கும் இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரண உதவிகள் பற்றிய சரியான விவரங்களை கொழும்பு தலைமையலுவலகங்களுக்குத் தெரிவிக்காமல், ஏதோ அவர்களது தேவைகள் யாவும் துரிதத்தியில் நிறைவேற்றப்பட்டு விட்டதாக போலியான அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதை பொறுப்புவாய்ந்த தொண்டர் நிறுவனங்கள் மனிதநேயம் கருதி இனிமேலாவது நிறுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

விலாவாரியாக விவரிப்பு

இந்நிறுவனம் குறிப்பாக தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்தோரின் இடர்நிலை குறித்து இவ்வறிக்கையில் விலாவாரியாக விவரித்துள்ளது.

மே மாத வாக்குறுதி

இவர்களுக்கு கடந்த மே மாதத்தில் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட நிவாரண உதவி [ரொக்கப் பணம் 2000 ரூபா உட்பட] இதுவரையும் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் ஜூன் மாதத்திற்கான உதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தற்போது தெரிவிக்கப்படுகிறது. இது எந்தளவில் சாத்தியப்படும், நிறைவேற்றப்படும் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். என்றும் அவ்வறிக்கை கூறுகிறது.

பலதரப்பட்ட பிரச்சினைகள்

இடம்பெயர்ந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பலதரப்பட்டவை. அவற்றை அவர்களுக்கான தங்குமிடம் தற்காலிக முகாம், (பாடசாலை மற்றும் பொதுஇடங்கள்) தனியார் வீடுகள், கைவிடப்பட்டவீடுகள், உறவினர், நண்பர்கள் வீடுகள் என இவற்றை வகைப்படுத்தலாம்.

பதற்றத்தால் வெளியேறியோர், போர் புரிவோரின் அறிவிப்பினால் வெளியேறியோர், என இடம்பெயர்ந்தோரில் அடங்குகின்றனர்.

உண்மைநிலை வெளிவர வேண்டும்

உரிய உதவிகள் உரியவர்களைச் சென்றடைய வேண்டும். அதுவே நியாயம்.

ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு ஒரு பாய், சில தம்ளர்கள் என அரைகுறை நிவாரணங்களை வழங்கும் சில நிறுவனங்கள் கொழும்புக்கு உதவி நிலையை திரிபுபடுத்தி, காட்டி அங்குள்ளவர்கள் உண்மை நிலையை அறிந்து கொள்ள முடியாதவாறு குழப்பிவிடுகின்ற இழிநிலை காண முடிகிறது.

புள்ளிவிபரம்

உண்மையாக, மனிதாபிமான ரீதியில் வழங்கப்பட வேண்டிய புள்ளி விவரக் கணக்கை தத்தம் மேலிடத்துக்குத் தெரியப்படுத்தினால் அவை நிச்சயமாக முழு உதவிகளையும் வழங்கியே தீரும் என எதிர்பார்க்கலாம்.

அரசின் கடமை

உணவு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அரசின் கடமை என்றால் தங்குமிட வசதி முதலான ஏனைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் பாரிய பொறுப்பைத் தம்பால் கொண்டுள்ள குறிப்பிட்ட நிறுவனங்கள் தம் பொறுப்பை உரிய வகையில் நிறைவேற்றாது தட்டிக் கழிப்பது தான் ஏனென்று புரியவில்லை.

திரிபோஷா

திரிபோஷா விநியோகத்திலும் உண்மையான கரிசனை பொறுப்புணர்வுடன் மேற்கொள்ளப்பட்டால் கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் பெரிதும் பயனடைவர். போஷாக்கின்மை இதன் மூலம் தவிர்க்கப்படும்.

இடம்பெயர்ந்தோரின் சுகாதார வசதிகள் விடயத்திலும் கூடிய கவனம் செலுத்தப்பட்டாக வேண்டும்.

அழுத்தம் அவசியம்

கிராமசேவகர், பிரதேச செயலர், செயலக மட்டத்திலான செயற்பாடுகளும் இடம் பெயர்ந்தோர் நலன் பேணத்தக்கதாக அமைகின்றன. இது முழுமையான பாரபட்சமற்றதான, ஒழுங்கான செயற்பாடுகளாக அமைதல் வரவேற்கத்தக்கது.

கொழும்பு தலைமையகங்களுக்கு குறிப்பிட்ட சில தொண்டர் நிறுவனங்கள் தவறான தகவல்களை கொடுத்து, தம் பொறுப்பிலிருந்து நழுவிக்கொள்ளப் பார்க்கும் நிலை அகல அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.''

இவ்வாறு இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(ஸ்ரீ)

அதிபர் சேவை பதவியுயர்வு கடிதங்கள் தயாராவதாக தகவல்

(திருகோணமலை)

இலங்கை ஆசிரியர்சேவை வகுப்பு 2 இல் உள்ள அதிபர்களை 1 ஆம் வகுப்புக்கும் வகுப்பு 3 இல்உள்ள அதிபர்களை 2 ஆம் வகுப்புக்கும் பதவிஉயர்த்தும் கடிதங்கள் கல்விச்சேவை ஆணைக்குழுவினால் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது.

இத்தகவலை கல்விச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் எம். டி. பந்துசேன இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு தெரிவித்துள்ளார். [ஸ்ரீ]

மகாபொல கொடுப்பனவு 200 ரூபாவால் அதிகரிப்பு

(கொழும்பு)

மகாபொல புலமைப்பரிசில் மாதாந்தக்கொடுப்பனவு 200 ரூபாவால் அதிகரிக்கப்படும். ஜூலை மாதத்திற்கு முன் இது நடைமுறைப்படுத்தப்படும் என தான் நம்புவதாக உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக உணவுத்துறை அமைச்சர் கிங்ஸ்லி ரி. விக்கிரமரட்ண பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சபை ஒத்திவைப்பு வேளையில் மாகபொல புலமைப்பரிசில் கொடுப்பனவை 50 சதவீதத்தால் அதிகரிக்கவேண்டுமென்ற பிரேரணையை ஐ.தே.க.எம்.பி. கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு சமர்ப்பித்திருந்தார்.

இது பற்றி அமைச்சர் விக்கிரமரட்ண மேலும் தெரிவித்ததாவது:-

மகாபொல புலமைப்பரிசில் திட்டம் மகாபொல நிதியத்திற்குக்கிடைக்கும் நிதியத்தினூடாகவே நடைமுறைப்படுத்தப்படுகிறது. அந்த நிதியத்தால் தாங்கிக்கொள்ள முடியாத செலவீனத்தை ஈடுசெய்வதென்பது மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கையாளர் சபையின் கொள்கையல்ல.

ஆனாலும், 1994 இல் புலமைப்பரிசில் திட்டத்தில் அதிக் எண்ணிக்கையான மாணவர்கள் பயன் பெறும் விதத்தில் விரிவுபடுத்தப்பட்டது.

1995 இல் 4600 மாணவர்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் 7000 பேருக்கு வழங்கப்படுகிறது. நிதியத்திலுள்ள தொகையைக் கொண்டே புலமைப்பரிசில் தொகையை அதிகரிக்க முடியும். (சு-ஸ்ரீ)

வருடாந்த உற்சவம்

(அரியாலை)

இணுவில் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தில் இம்மாதம் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரதோற்சவமும் மறுநாள் 1 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஸ்ரீ-106)

உற்சவம் இடம் பெறவில்லை

(அரியாலை)

குடாநாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் யுத்த சூழ்நிலை காரணமாக இம்மாதம் 13 ஆம் திகதி இடம்பெறவிருந்த பாஷையூர் புனித அந்தோனியார் வருடாந்த திருவிழாவும், திருச்சொரூப பவனியும், ஆசீர்வாதமும் இம்முறை நடைபெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இம்முறை ஆலயத்தின் 150 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நூல் வெளியீடும் பல சிறப்பு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஆயினும் சுன்னாகம், மானிப்பாய் அந்தோனியார் ஆலயங்களில் முறையே 13 ஆம் 18 ஆம் திகதிகளில் தேர்ப்பவனி இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (க-106)

முதுகில் பாய்ந்த கத்தியுடன் பொலிஸிடம் ஓடிச் சென்ற நபர்

(கண்டி)

முதுகில் கத்தியால் குத்தப்பட்டு கடும் காயத்துக்குள்ளான நபரொருவர் கத்தியின் பிடி மாத்திரம் முதுகில் தெரியத்தக்க நிலையில் பொலிஸ் நிலையத்திற்கு ஓடிச் சென்று புகார் செய்தாராம்.

இறக்குவானைப் பொலிஸ்பகுதியில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

பொலிஸார் தங்கையா தம்பிராஜா என்ற இந்நபரை உடன் இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

சந்தேக நபரான சந்தனம் என்பவரை பொலிஸார் இது சம்பந்தமாகக்கைது செய்துள்ளனர். சந்தேக நபர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ)

தென்மராட்சியிலிருந்து பெருமளவு மக்கள் நீர்வேலியூடாக இடம்பெயர்வு

(தென்மராட்சி)

தென்மராட்சியிலுள்ள மட்டுவில், சரசாலை, நுணாவில், கைதடி, நாவற்குழி போன்ற பகுதிகளில் சிக்குண்டிருந்த மக்களில் பெருந்தொகையானவர்கள் கடந்த சில தினங்களாக நீர்வேலி தரவை ஊடாக வந்துசேர்ந்துள்ளனர்.

இருப்பினும் வயது முதிர்ந்தவர்கள் சிலரும் வேறு சிலரும் இன்னமும் வந்து சேரவில்லை எனத் தெரியவருகின்றது.

இவ்வாறு இன்னமும் வராமல் இருக்கும் தமது உறவினர்களின் வருகைக்காக தினமும் பலர் நீர்வேலிப்பகுதியில் வீதியோரங்களில் காத்திருப்பதாகவும் தெரிய வருகின்றது.

கடந்த ஒரு மாதகாலமாக நூற்றுக்கணக்கான மக்கள் தமது உயிர்களைக்கையில் பிடித்த வண்ணம் தென்மராட்சியில் இருந்து வந்துள்ளனர் என அறிப்பப்படுகின்றது. (க-77)

இன்று உற்சவம்

(அரியாலை)

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை சங்கடஹர சதுர்த்தி உற்சவம் இடம்பெறவுள்ளது. (க-106)

அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலத்தைச்சேர்ந்த இதுவரை பாடசாலைக்குச் சமுகமளிக்காத மாணவர்களையு அவர்களது பெற்றோர்களையும் 21ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலைக்குச்சமுகமளிக்குமாறு அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். [க

அரையாண்டு கண்ட வலம்புரியே வாழி!

அகிலத்தில் நற்பணிக்காய் உதித்திட்ட வலம்புரியே!
அனைவரின் கைகளிலே உலவிவரும் வலம்புரியே!
ஆகீசன்துணையுண்டு உனக்கென்றும் வலம்புரியே!
ஆற்றிடுவாய் நல்லபணி என்றும் வலம்புரியே!
இகல்வரும் போதும் நீ இன்புடனேற்பாய் வலம்புரியே;
இசைப பொறிகட்கு நல்லசெய்தி தந்திடுவாய்
— வலம்புரியே!
ஈசனருள் பெற்றுநீ உயர்ந்திடுவாய் வலம்புரியே!
ஈட்டமீட்டமாய் வாசகர் பெற்றாய் வலம்புரியே
— வாழி!

— ஆளியூர் ஐ. வரன்

✱ யாழ். போதனாவைத்தியசாலை

ஆய்வு கூட உத்தியோகத்தர்கள் நேற்று பகிஷ்கரிப்புப் போராட்டம்

அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூட தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் உடபட கணிசமான உத்தியோகத்தர்கள் நேற்று வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அருகில் உள்ள பிரேத அறையிலிருந்து வெளிவரும் துர்நாற்றத்தை சகிக்கமுடியாதுள்ளதாகவும் இச் சூழ் நிலையில் தொடர்ந்து கடமையாற்றுவது தமக்கு பெரும் கஷ்டமாக உள்ளதாகவும் சம்பந்தப்பட்டோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வைத்தியசாலைப்பிரேத அறைக்கு கொண்டுவரப்படும் சடலங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதாகவும் இவற்றை பாதுகாக்க போதிய மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுதல் அவசியம் என்றும் ஊழியர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் மேற்படி சடலங்களிலிருந்து வெளிவரும் புழுக்கள் அருகில் உள்ள உணவு தயாரிக்கும் சாலை, மற்றும் முக்கிய இடங்களுக்குச் செல்வதும் மிகவும் அருவருக்கத்தக்கதாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவிடயம் குறித்துமுக்கிய அதிகாரிகள் அக்கறை காட்டுவதாக தெரியவில்லை என்றும் இதுமிகவும் வருந்தத்தக்க செயல் என்றும் சம்பந்தப்பட்டோர் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

'நல்லைக்குமரன்' மலருக்கு ஆக்கங்களை அனுப்பவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு யாழ்.மாநகரசபையின் சைவ சமய விவகாரக குழுவினால் வருடந்தோறும் வெளியிடப்பட்டுவரும் நல்லைக் குமரன் மலருக்குசமயப்பெரியார்கள், அறிஞர் பெருமக்களிடமிருந்து ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுவதாக மேற்படி குழுவின் தலைவர் வைத்திய கலாநிதி ஆர். தெய்வேந்திரன் அறிவித்துள்ளார்.

ஆக்கங்களை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் இயங்கும் சுகாதாரப் பகுதியில் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (ந)

வயோதிப...

நீதிபதி உத்தரவிட்டார்.

அபயசிங்க உதயன் சலாகே அனில் காமினி, களுபண்டாகே சுகந்த குமாரஹேரத் ஆகிய இரு இராணுவத்தினருமே நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டவர்களாவர்.

இவ்இருவரும் கையாடிய நகையையும் இரண்டாயிரத்து நூறு ரூபா பணத்தையும் உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிபதி கோப்பாய் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (க-12)

ஈழத்தமிழர்...

பதாகவும், இலங்கைப் பிரச்சினைபற்றி பிரதமர் வாஜ்பாய் எடுத்துள்ள முடிவு தனக்கு ஏற்புடையது என்றும் கூறினார். (வ)

கட்சி விட்டு....

தயாராக உள்ளனர். இதற்கு வழிவகுக்கும் முகமாகவே கட்சி விட்டு கட்சிதாவும் சட்டத்தை முதலில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு அரசு விரும்புகிறது.

அதன் மூலமே அரசியலமைப்பு சீர்திருத்தத்தை பாராளுமன்றத்தில் பெரும் பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்...

மக்கள் தமிழ் மக்களைப் போல் சமத்துவமாகத் தன்மானத்துடன் வாழ விரும்புகின்றனர் இந்த விடயத்தில் தமிழ்க்கட்சிகளுடன் விட்டுக் கொடுத்துப் போ முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருக்கின்றது என்றும் இதுவே சமாதானத்திற்கான யதார்த்தமான திறவுகோலாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

பொதுத் தேர்தலை,..

தேர்தலை பின்போடுமாறு பல்வேறு அரசியல்கட்சிகள் வற்புறுத்திவருவதுடன் இத்தகைய நெருக்கடி நிலையில் பொதுத்தேர்தலை நடத்துவது பொருத்தமானதாக இல்லைஎன்றும் அக்கட்சிகள் சுட்டிகாட்டியுள்ளன.

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சி எம்.பிக்களும் ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணி எம்.பிக்களும் இணைந்து பொதுத்தேர்தலை பின்போடுமாறு வலியுறுத்திக் கூறியுள்ளதாகவும் அமைச்சர் ஜெயரத்தின மேலும் தெரிவித்துள்ளார்.

செஞ்...

எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் யாழ்ப்பாணத்திலிருந்து சிகிச்சைக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்ட 14 நோயாளர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்படுவதுடன் 116 தபால் பொதிகளும் எடுத்து வரப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இக்கப்பல் நோயாளர்களை ஏற்றிக் கொண்டு இன்றே மீண்டும் திருமலை நோக்கி புறப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-4)

அரசியல்...

அரசியல் யாப்பு தொடர்பான பேச்சு வார்த்தைகளில் அரசு மேற்கொண்டு வருகின்ற குறுகிய மனப்பான்மையை ஐ. தே. கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது எனக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறள விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கையில் அரசியல் யாப்புச் சட்டத்தில் கிருத்தம் கொண்டு வருவதற்கு ஐ தே கட்சியின் செயற்பாடே காரணம் என்றும் அரசின் அரசியல் லாபம் தேடும் குறுகிய மனப்பான்மையினை மக்களிற்கு வெளிப்படுத்துவதற்கு ஐ. தே. கட்சி தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய சி விடயங்களில் ஐ,தே கட்சியும்பொதுஜனஐக்கிய முன்னணியும் இணக்கம் கண்டுள்ளதைக்கூட அரச ஊடகங்கள் திரிபுபடுத்திக் கூறியுள்ளதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

இனப்பிரச்சினை தீர்வு

அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இக் கூட்டம் தொடர்பாக ரெலோ முதல்வர் ஸ்ரீகாந்தா கருத்துத் தெரிவிக்கையில்: தமிழ் மக்களைப் பொறுத்தளவில் வடக்குக் கிழக்கு இணைந்த 'மொழி வழி மாநிலமே' இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியுமென்று கூறியுள்ளார்.

ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளுக்கு இவ் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

இடைக்கால நிர்வாக சபை தனி நாட்டிற்கே வழிவகுக்கும்

சிங்கள உறுமய கட்சி சீற்றம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும், ஐக்கியதேசியக்கட்சியும் முன்வைத்திருக்கும் வடக்குக்கிழக்கில் இடைக்கால நிர்வாகசபை யோசனையானது தனிநாடு ஒன்று அமைப்பதற்கு வழி ஏற்படுத்தும் என்றுசிங்கள உறுமயகட்சி செயலாளர் வெளியிட்டிருக்கும் அறிக்கை ஒன்றில் குற்றம் சாட்டியுள்ளார்.

கட்சியின் செயலாளர் திலக் கருணாரட்ணவினால் வெளியிடப்பட்டுள்ள அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

இந்த இடைக்கால நிர்வாக சபை யோசனையானது வடக்குக்கிழக்கில் வாழும் சிங்கள மக்களுக்குச் செய்யும் துரோகமாகும் என்றும் இத்தகைய இடைக்கால நிர்வாக சபைக்கு அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் எவ்வாறு இணங்க முடியுமென்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (வ)

பெற்றோலிய கூட்டுத்தாபன செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன வடபிராந்திய கிளையில் போதியளவு ஊழியர்கள் வேலைக்கு அமர்த்தப்படாமையால் கூட்டுத்தாபனத்தினரின் அன்றாட வேலைகள் பாதிப்படைந்து வருவதாக வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் முன்னர் 28 ஊழியர்கள் கடமை புரிந்ததாகவும் தற்போது அதில் அரைவாசி ஊழியர்கள் (14பேர்) கடமையில் இருப்பதாகவும் இதனால் பெற்றோலியக் கூட்டுத்தாபன முகவர் நிலையங்களை சரியான முறையில் பரிசோதனை செய்ய முடியவில்லையெனவும் இவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை கூட்டுத்தாபனத்தில் நிலவும் ஊழியர் பற்றாக்குறையைப் போக்குவதற்கு 1998ல் விண்ணப்பம் கோரப்பட்டதாகவும் அவ் விண்ணப்பதாரிகளுக்கு 1999ல் நேர்முகப் பரீட்சை நடந்ததாகவும் 2000ம் ஆண்டாகியும் நியமனம் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

தமிழர் எழுச்சி மாநாட்டில் மு.கருணாநிதி, அத்வானி பங்குபற்றார்கள்

தமிழகத்தில் யூலை மாதம் 1ம் திகதி நடைபெறவிருக்கும் தமிழர் எழுச்சி மாநாட்டில் தமிழக முதல்வர் மு. கருணாநிதி மத்திய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி ஆகியோர் கலந்து கொள்ள மாட்டார்களென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரோடில் நடைபெறவுள்ள தமிழர் எழுச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கு தேசிய ஜனநாயகக் கூட்டணித் தலைவர்களுக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச்செயலர் வை.கோபாலசாமி அழைப்பு விடுத்திருந்தார்.

தமிழகமுதல்வர் மு.கருணநிதி,மத்திய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி,ஆந்திர முதல்வர் சந்திரபாபுநாயுடு ஜம்முகாஷ்மீர் முதல்வர் பாருக்அப்துல்லா ஆகியோர் மாநாட்டில்கலந்து கொள்ளச் சம்மதம் தெரிவித்திருந்தனர்.

இம்மாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக தீர்மானங்கள் நிறை வேற்றப்படவிருப்பதாக புலனாய்வுத்துறை எச்சரிக்கைவிடுத்ததை அடுத்து மு.கருணநிதியும், எல்.கே அத்வானியும் கலந்து கொள்வதைத் தவிர்த்துள்ளதாகத் தெரியவருவதுடன் இது தொடர்பாக வை.கோவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது

குமாரை...

பவம் ஒன்று தொடர்பாக கல்கிசை நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட ஆறு சந்தேக நபர்களில் ஒருவர் குமார் பொன்னம்பலத்தினை சுட்டுக் கொன்றவர் என குற்றத்தடுப்புப் பொலிஸாரினால் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட ஆறு போது பெயர்களையும் வாசித்தபோது குமாரின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் அடையாளம் காணப்பட்டார்.

அடையாளம்காணப்பட்டவர் றிசேவ்பொலிசாராகக்கடமை ஆற்றிய ரணசிங்க எனவும் அவரை அடுத்த மாதம்4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் கல்கிசை பதில் நீதிவான் எஸ். கணபதிப்பிள்ளை உத்தரவிட்டுள்ளார்.

குறித்த ரணசிங்கவே, சாந்த என்ற பெயருடன் குமார் பொன்னம்பலத்தை அழைத்துச்சென்றவர் என்று குற்றத்தடுப்புப்பிரிவுப் பணிப்பாளர் முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

சிற்றிஒவ்...

வதற்கு பயணச்சீட்டுப்பெற்றவர்கள்நாளை புதன்கிழமை காலை 7 மணிக்கு மதிய உணவுடனும், தண்ணீருடனும் யாழ். சிங்கள மகாவித்தியாலய மைதானத்திற்கு வருகைதருமாறு யாழ் சிவில் நிர்வாக காரியாலயம் கேட்டுள்ளது. (வ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
வெளிவாரிப் பதிவுகள்
பரீட்சைகள் அலகு
வெளிவாரிப்
பரீட்சைகள்
1997/1998

பொதுக் கலைமாணி பகுதி-11—1998
வணிகமாணி பகுதி 11 1998

மேற்படி பரீட்சைகள் யூலை மாதம் 03-ஆம் திகதி முதல் (2000-7-3) ஆரம்பமாகின்றன. எனவே இப் பரீட்சைக்காக விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் தங்களது நேர சூசிகைகளை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் அலுவலக நேரத்தில் 2000-6-21ம் திகதிமுதல் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி பரீட்சைகள் வவுனியா வளர்கத்திலும் நடைபெறும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(கி/525)

நாகம்ஸ்
சுன்னாகம்

கார்த்திக், ரோஜா, அஜித் நடித்த
இனிய பாடல்கள்நிறைந்த
உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்
(றீல்ஸ்)
11.00, 2.30 [பு.நே]
(கி/492)

St, Patrick's College Jaffna
முக்கிய அறிவித்தல்

க. பொ. த. (உயர்தரம்) 2000

தொண்டைமானாறு பொதுப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்வதற்காக ஆண்டு 13 மாணவர்கள் நாளை (21-06-2000) புதன்கிழமை மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய பணிமனையில் காலை 10 மணி முதல் 12 மணிவரை பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி பதிவு செய்துகொள்ளவும்.

அதிபர்.

(C 528)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ பனத்தாரினால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு யூன் மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.